# தமிழ் மொழியும் இலக்கியமும்

## தரம் 10, 11

## இலக்கியத்தொகுப்பு

### அலகு 06
### திருக்குற்றாலக் குறவஞ்சி




## வினா விடைத்தொகுப்பு

**கடந்த கால க.பொ.த (சா/த) வினாக்களுடன் ஒப்பிட்டு நோக்கப்பட்டுள்ளது**

**தொகுப்பாசிரியர்: செ.ராஜ்குமார்**

**"சோதனைகள் என்பது சாதனைகளுக்கான ஏணிப்படி ஏறிச்சென்றால் இலக்கை அடைவாய்"**

**No - 15A, Anumar Street, Nochchimunai, Batticaloa T.P 0772926914**

அலகு 06

# குற்றாலக் குறவஞ்சி

- **18ஆம் நூற்றாண்டில்** தமிழ்நாட்டில் வாழ்ந்த **திரிகூடராசப்பகவிராயரால்** பாடப்பட்டது
- **திருக்**குற்றால நகரில் எழுந்தருளியுள்ள இறைவனாகிய **குற்றால நாதரை பாட்டுடைத்தலைவனாக** கொண்டு இந்நூல் இயற்றப்பட்டது
- **இவர் திருக்குற்றால தலபுராணம், திருக்குற்றாலமாலை, திருக்குற்றாலஉரை, திருக்குற்றாலகோவை** போன்ற நூல்களை இயற்றியுள்ளார்

### சந்தி பிரிக்கப்பட்ட பாடல்

**மலை வளம்**

**வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு கொஞ்சும்**
**மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்**
**கானவர்கள் விழி எறிந்து வானவரை அழைப்பர்**
**ககனசித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பார்**
**தேன்அருவி திரை எழும்பி வானின் வழி ஒழுகும்**
**செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்**
**கூனல் இளம்பிறை முடித்த வேணியலங்காரர்**
**குற்றால திரிகூட மலை எங்கள் மலையே.**

### அரும்பத விளக்கம்

1. வானரம் - ஆண்குரங்கு
2. மந்தி - பெண் குரங்கு
3. வான்கவி தேவர்
4. வானவர் - தேவர்கள்
5. கானவர் - வேடர்
6. காயசித்தி - நோய் தீர்க்கும் மூலிகை
7. செங்கதிரோன் - சூரியன்
8. பரிக்கால் - குதிரைக்கால்
9. தேர்க்கால் - தேர்ச் சக்கரம்

### பொருள்

ஆண்குரங்குகள் பலவகையான கனிகளை பறித்துக் கொடுத்து பெண்குரங்குகளுடன் கொஞ்சும். அந்தப் பெண்குரங்குகள் உண்ணும் போது கீழே சிந்துகின்ற கனிகளுக்கு வானத்தில் உள்ள தேவர்கள் கெஞ்சிக் கொண்டிருப்பர்.வேடர்கள் தம் கண் பார்வையினால் வானில் உள்ள தேவர்களை கீழே வருமாறு அழைப்பர். வானில் உலாவித் திரியும் சித்தர்கள் கீழே இறங்கி வந்து காயசித்தி மூலிகைகளை வளர்ப்பர். தேன் கலந்த மலையருவிகளின் அலைகளானது வானின் வரை சென்று ஒழுகும். அதில் சூரியனின் தேர்ச்சக்கரமும், தேரில் உள்ள குதிரைகளின் கால்களும் வழுக்கிச் செல்லும். வளைந்த இளம்பிறைச் சந்திரனை தன் சடாமுடியில் சூடிய அழகுடைய திருக்குற்றாலநாதர் எழுந்தருளியிருக்கின்ற சிறப்பு மிக்க மலையே எமது மலையாகும்.

**மலை வளம்**

**முழங்கு திரை புனல் அருவி கழங்கு என முத்தாடும்** **( O/L 2019 02.III )**
**முற்றம் எங்கும் பரந்து பெண்கள் சிற்றிலை கொண்டு ஓடும்**
**கிழங்கு கிள்ளி தேன் எடுத்து வளம்பாடி நடிப்போம் .**
**கிம்புரியின் கொம்பு ஒடித்து வெம்பு தினை இடிப்போம்**
**செழுங் குரங்கு தேமாவில் பழங்களை பந்து அடிக்கும் .**
**தேன் அலர் சண்பகவாசம் வானுலகில் வெடிக்கும்**
**வழங்கு கொடை மகராசர் குறும்பலவின் ஈசர்**
**வளம் பெருகும் திரிகூட மலை எங்கள் மலையே.**

### அரும்பத விளக்கம்

1. திரை - அலை
2. புனல் - நீர்
3. கழங்கு - விளையாட்டு
4. சிற்றில் - மணல் வீடு
5. கிம்புரி - யானை
6. கொம்பு - தந்தம்
7. வெம்பு தினை - வறுத்த தினை
8. வெடிக்கும் - பரவும்



S Rajkumar

## பொருள்

ஒலி எழுப்புகின்ற அலைகளையுடைய நீர் அருவியானது கழுங்கு விளையாடுவது போல முத்துக்களை சொரிந்து கொண்டிருக்கும். அந் நீர் அருவியானது வேடர் இல்லங்களின் முற்றங்கள் தோறும் பரவிச் சென்று சிறு பெண்கள் கட்டிய சிறு வீடுகளை அடித்துச் செல்லும். மலைச்சாரல்களில் கிழங்குகளை கிள்ளி எடுத்து, தேனடைகளில் இருந்து தேனை எடுத்தும் எம் மலை வளத்தைப் பாடி நடனமாடுவோம். யானைகளின் தந்தம் எடுத்து வறுத்த தினையினை உரலில் இட்டு இடிப்போம். இளமையான குரங்குகள் மாமரத்தில் இனிய கனிகளைப் பறித்து அவற்றை பந்துகளாக அடித்து விளையாடும். தேன் நிறைந்த செண்பக மலர்களின் வாசனையானது வானுலகம் வரை சென்று பரவும். அருட்கொடை வழங்கும் கொடைத் தன்மையுடைய மகராசர் குறும் பலாமரத்தடியில் குடியிருக்கின்ற வளம் பெருகியிருக்கும் மலையே எங்கள் மலையாகும்.

### நாட்டு வளம்

**சூழ மேதி இறங்கும் துறையில்** **( O/L 2016 02.II )**
**சொரியும் பாலை பருகிய வாளை**
**கூழை வாசம் பலாவினில் பாய**
**கொழும் பலாக்கனி வாழையில் சாய**
**வாழை சாய்ந்து ஒரு தாழையில் தாக்க**
**வரும் விருந்துக்கு உபசரிப்போர் போல்**
**தாழை சோறிட வாழை குருத்திடும்**
**சந்திர சூடர் தென் ஆரிய நாடே**

### அரும்பத விளக்கம்

1. மேதி - எருமை
2. துறை - நீர்நிலை
3. வாளை - வாளை மீன்
4. கூழை - ஒரு வகைப் பலா

## பொருள்

எருமை மாடுகள் கூட்டம் கூட்டமாக இறங்குகின்ற நீர்நிலையில், அவை சொரிகின்ற பாலைப் பருகிய வாளை மீன்கள் மணம் வீசும் கூழைப் பலாவினை நோக்கி பாயும், அதனால் கொழுவிய பலாக்கனிகள் வாழை மரங்களில் மேலே உதிர, அதனால் வாழைகள் சாய்ந்து தாழை மரங்களை தாக்க, வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு உணவு கொடுத்து உபசரிப்பதைப் போல தாழையானது பூக்களை சோறு போல சொரிய, வாழை தன் குருத்தினை விரித்து அவற்றினை ஏந்தும். இத்தகைய சந்திரசூடரின் தென் ஆரிய நாடு எங்கள் குற்றால நாடாகும்.

### நாட்டு வளம்

**மாதம் மூன்று மழை உள்ள நாடு**
**வருடம் மூன்று விளைவு உள்ள நாடு**
**வேதம் மூன்றும் பலா உள்ள நாடு**
**விஷேஷம் மூன்றும் குலா உள்ள நாடு**
**போதம் மூன்றும் நலன் செய்யும் நாடு**
**புவனம் மூன்றும் வலஞ் செய்யும் நாடு**
**நாதம் மூன்று உருவான குற்றால**
**நாதர் ஆரிய நாடு எங்கள் நாடே**

## அரும்பத விளக்கம்

1. விஷேசம் - கிரியை
2. போதம் - மனித நிலை (பிறப்பு, வாழ்வு, இறப்பு)
3. நலன் - நன்மை
4. புவனம் - பூமி, உலகம்
5. மூன்று உரு - மும்மூர்த்திகள்
6. விளைவு - விளைச்சல்
7. நாதம் - நாத தத்துவம்

## பொருள்

மாதம் தோறும் தவறாமல் மூன்று மழை பொழிகின்ற நாடு, வருடம் மூன்று போகங்கள் விளைகின்ற நாடு, வேதங்கள் மூன்றும் **(இருக்கு, யசூர், சாமம்**) வேர், மரம், பயன் என மூன்றாக அமைந்த குறும்பலாவை உடைய நாடு. **நித்தியம், நைமித்தியம், காமிகம்** என மூன்று சிறப்புக்கள் தவறாமல் நடக்கின்ற நாடு. பிறப்பு, வாழ்வு, இறப்பு ஆகிய மூன்று நிலைகளிலும் நன்மை தருகின்ற **நாடு. மேல், கீழ்,** இடை என மூன்று உலகங்களிலும் வாழ்பவர்கள் வந்து போற்றுகின்ற நாடு, நாததத்துவத்தின் மெய்ப்பொருளாக **அரி, அயன், அரன்** ஆகிய மூன்றுருவாக (மும்மூர்த்திகள்) விளங்கும் குற்றலநாதரின் ஆரிய நாடே எங்கள் நாடாகும்.



S. Rajkumar

## நாட்டு வளம்

**நீங்கக் காண்பவர் சேர்ந்தவர் பாவம்**
**நெருங்கக் காண்பது கன்னலின் செந்நெல்**
**தூங்கக் காண்பது மாம்பழக் கொத்து**
**சூழலக் காண்பது பூந்தயிர் மத்து**
**வீங்கக் காண்பது மங்கையர் கொங்கை**
**வெடிக்கக் காண்பது கொல்லையின் முல்லை**
**ஏங்கக் காண்பது மங்கல பேரி**
**ஈசர் ஆரிய நாடு எங்கள் நாடே**

### அரும்பத விளக்கம்

1. கன்னல் - கரும்பு
2. கொல்லை - முல்லை நிலம், பயிர் நிலம்
3. பேரிகை - முரசு, வாத்தியம்
4. சேர்ந்தவர் - வாழ்கின்றவர்
5. வெடிக்க - பிளக்க

### பொருள்

இந்த நாட்டினை வந்து சேர்ந்தவர்கள் நீங்கக் காண்பது தாம் செய்த பாவங்களாகும். இந்நாட்டில் நெருங்கி இருப்பவையெல்லாம் வயல்களில் உள்ள கரும்பும், நெல்லும் ஆகும். இங்கு தொங்கிக் கிடப்பவை எல்லாம் மாம்பழக் கொத்துக்கள். இங்கு சுழன்று கொண்டிருக்க காண்பவை தயிர்கடையும் அழகிய மத்துக்களாகும். இங்கு வீக்கமுடன் காணப்படுபவை அழகிய மங்கையர் மார்பகங்களாகும். இங்கு வெடிக்க காண்பதெல்லாம் விட்டின் பின்புறத்தில் உள்ள முல்லை அரும்புகளாகும். இங்கு ஏங்கக் காண்பது மங்கலமான பேரிகை ஒலியாகும். இத்தகைய வளங்கள் நிறைந்த ஈசன் குற்றாலநாதருக்கு சொந்தமான நாடே எங்கள் நாடாகும்.

### 01 குறுவினாக்களுக்கு விடை எழுதுக.

**1.. “ வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு கொஞ்சும்**
**மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்...”** **( O/L 2019 01.II)**

அ. இங்கு வான்கவிகள் எனப்படுவோர்?
வானத்தில் உள்ள தேவர்கள்

ஆ. வானரம்,எனபதன் பொருள்? மந்தி என்பது என்ன?
வானரம் - ஆண் குரங்கு மந்தி- பெண்குரங்கு

இ. இவ்வடிகளில் வெளிப்படும் அணி யாது?
உயர்வு நவிற்சியணி

**2. “ கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பர்**
**கவன சித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர்... ”**

அ. இதில் கானவர்கள் எனப்படுவோர்?
வேடர்கள்

ஆ. வானவர் என்பதன் கருத்து யாது?
தேவர்கள்

இ. காயசித்தி என்பதன் மூலம் கருதப்படுவது?
நோய் தீர்க்கும் மூலிகை

**3. “ தேனருவி திரை எழும்பி வானின்வழி ஒழுகும்**
**செங்கதிரோன் பரிக்காலும், தேர்க்காலும் வழுகும்... ”**

அ. இங்கு செங்கதிரோன்,பரிக்கால், தேர்க்கால் என்பவற்றின் மூலம் புலப்படும் கருத்து?
செங்கதிரோன் - சூரியன், பரிக்கால் - குதிரைக்கால்,
தேர்க்கால் - தேரில் உள்ள சக்கரங்கள்

ஆ. இவ்வடிகளில் வெளிப்படும் அணி யாது?
உயர்வு நவிற்சியணி



S.Rajkumar

**4 " கூனிலிளம் பிறை முடித்த வேணியலங்காரர்**
**குற்றால திரிகூட மலையெங்கள் மலையே... "**

அ. இவ்வடிகளில் கூனிலிளம் பிறை என்பதன் பொருள்?
வளைந்த இளம் பிறைச் சந்திரன்

ஆ. இங்கு வேணியலங்காரர் எனக் கருதப்படுபவர் யார்?
சிவபெருமான்

**5 '' கிம்புரியின் கொம்பொடித்து**
**வெம்பு திணை இடிப்போம்... "** **( O/L 2017 01. V)**

அ. இதில் கிம்புரியின் கொம்பு எனக்கருதப்படுவது யாது?
யானையின் பூண் பூட்டிய தந்தத்தை

ஆ. இச்செயலை செய்பவர்கள் யார்?
குறத்தி பெண்கள்

**6. " சூழுமேதி இறங்கும் துறையில் சொரியும் பாலை......"**

அ. இங்கு மேதி என்பதால் நீர் விளங்கிக் கொள்வது?
எருமை

ஆ. துறை எனக்கருதப்படுவது யாது?
நீர் நிலை

**7. ''மாதம் மூன்று மழை உள்ள நாடு**
**வருடம் மூன்று விளைவு உள்ள நாடு..** **( O/L 2018 01. II )**

அ. இங்கு குறிப்பிடப்படும் நாடு எது?
திருக்குற்றாலம் அல்லது தென் ஆரிய நாடு

ஆ. விளைவு என்பது எதனை குறிக்கின்றது.
நல் விளைச்சல்

**8 " வேத மூன்றும் பலாவுள்ள நாடு**
**விஷேச மூன்றும் குலாவுள்ள நாடு... "**

அ. வேதம் மூன்றும் எனப்படுபவை எவை? ☐
இருக்கு, யசூர், சாமம்

ஆ. இங்கு விஷேசம் எனக் கருதப்படுபவை?
நித்திய கிரியை, காமிய கிரியை, நைமித்திய கிரியை

**9 " போதம் மூன்றும் நலஞ் செய்யும் நாடு**
**புவனம் மூன்று வலஞ் செய்யும் நாடு... "**

அ. இங்கு போதம் மூன்று எனப்படுபவை எவை?
பிறப்பு, வாழ்வு, இறப்பு

ஆ. இவ்வடிகளில் புவனம் என்பதன் பொருள் யாது?
உலகம் - மேல் உலகம் (வானுலகம்),நடு உலகம் (பூலோகம்),கீழ் உலகம்

**10. " நாத மூன்றுருவான குற்றால நாதர்**
**ஆரிய நாடு எங்கள் நாடே.. "**

அ. இவ்வடியில் நாத மூன்றுரு எனப்படுவோர்?
விஷ்ணு, பிரம்மா, சிவன்

ஆ. இங்கு நாத மூன்றுருவானவர் யார்?
குற்றால நாதர்

**11 " நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம்**
**நெருங்கக் காண்பது கன்னலின் செந்நெல்... "**

அ. இங்கு நீங்கக் காண்பது எது?
சேர்ந்தவர் பாவம்

ஆ. கன்னல் என்பதன் பொருள் யாது?
கரும்பு



S.Rajkumar

12 **திருக்குற்றாலக் குறவஞ்சி எனும் இலக்கியத்தின் ஆசிரியர் யார்?**
திரிகூடராசப்ப கவிராயர்

13 **குறவஞ்சி என்பது எவ்வகையான இலக்கிய வடிவத்தை சேர்ந்தது?**
பிரபந்தம் சிற்றிலக்கியம்

14 **திருக்குற்றாலக் குறவஞ்சியின் பாட்டுடை தலைவன், தலைவி யாவர்?**
தலைவன் - திருக்குற்றால நாதர் தலைவி - வசந்தவல்லி

15 **குறவஞ்சி என்பதன் பொருள் யாது?**
வஞ்சிக்கொடி போன்ற இடையினை உடைய குறத்திப் பெண்

16 **ஏனைய நூல்களுடன் ஒப்பிடுகையில் இதன் விசேடசிறப்பு என்ன?**
சொல்லழகு, பொருளழகு, கருத்தழகு, ஓசையின்பம், இனியநடை ஆகியன வாய்க்கப்பெற்றது.

17 **பெண்களின் 7 பருவங்களும் எவை?**
பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்

## 02. கட்டமைப்பு வினாக்கள்

**01. திருக்குற்றால மலை வளம் பற்றி எடுத்துரைக்குக.? ( O/L 2020 03. அ)**

திருக்குற்றாலக் குறவஞ்சியில் மலையின் சிறப்புக்களை முதல் இரண்டு பாடல்கள் வாயிலாக நாம் தொகுத்து நோக்கலாம்.

- குரங்குகள் தம் துணைகளுக்கு கனிகளை உண்ணும்படி கொடுத்து பின் அவற்றை கொஞ்சி விளையாடும். அப்போது சிந்தும் கனிகளுக்கு தேவர்கள் வரிசையில் நிற்குமளவு இனிய சுவையுள்ள மாங்கனிகளை கொண்டுள்ள மலை. இதனை பின்வரும் பாடலடிகள் மூலம் காணலாம்.

**“வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு கொஞ்சும்**
**மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்…**

- வேடுவர்கள் கண்ணால் பார்த்து தேவர்களை அழைக்கும் போது உயர்வு தாழ்வு அற்று தேவர்களும் வந்து உறைவதற்கு விரும்பும் மலை.
- வானத்தில் உலாவித் திரிகின்ற சித்தர் கூட்டத்தினர் அடிக்கடி வந்து காயசித்தி மூலிகை விளைவிக்கின்ற மலை.
- உயரமான மலைகளிலிருந்து தேன் கலந்த அருவிகளின் அலைகள் மேல் எழும்பி வானின் வழி வழிகின்ற போது சூரியனின் தேர்ச்சில்லும் பரிக்காலும் வழுக்குமளவில் நீர்வளம் நிறைந்த மலை.
- ஒலி எழுப்புகின்ற அலைகளையுடைய நீர் அருவியினுடைய அலைகள் கழங்கு விளையாடுவது போல முத்துக்களை சொரிந்து கொண்டிருக்கும். அந் நீர் அருவியானது வேடர் இல்லங்களின் முற்றங்கள் தோறும் பரவிச் சென்று சிறு பெண்கள் கட்டிய சிறு வீடுகளை அடித்துச் செல்லுமளவு நீர்வளம் நிறைந்த மலை.
- வானுலகம் வரை மணம் வீசும் செம்பக மலர்கள் மலர்கின்ற மலை.
- யானையின் தந்தம் கொண்டு தினையினை இடித்து உண்ணுகின்ற மலையாக விளங்குவது.
- நீர்வீழ்ச்சி, கிழங்கு, தினை, மாம்பழம், தேன் எனும் பலவகையான சிறப்புக்கள் நிறைந்துள்ள மலையாகவும் விளங்குவது.
- திருக்குற்றாலநாதர் எனும் இறைவன் வீற்றிருக்கின்ற மலை. இவ்வாறு வளைந்த இளம்பிறைச் சந்திரனை தனது சடாமுடியில் தரித்துள்ள திருக்குற்றால நாதர் வீற்றிருக கின்ற மலை.



S.Rajkumar

**02. திருக்குற்றால நாட்டுவளம் பற்றி தெளிவுறுத்துக? ( O/L 2016 03. அ ) ( O/L 2020 03. ஆ )**

திருக்குற்றாலக் குறவஞ்சியில் குற்றால நாட்டு வளமானது மூன்று பாடல்கள் வாயிலாக அழகுற வெளிப்படுத்தப்பட்டுள்ளது.அதனை பின்வருமாறு நோக்கலாம்,

- எருமைகள் கூட்டம் கூட்டமாக நீராடுகின்ற நீர்த்துறைகள் நிறைந்த நாடு. அத்துடன் நீர்நிலைகளில் எருமைகள் சொரிகின்ற பாலை வாளை மீன்கள் அருந்தும் அளவு பால் வளம் கொண்ட சிறப்பையும் கொண்ட நாடாக விளங்குகின்றது. **( O/L 2016 02.II.அ )**
- கூழைப்பலா மரங்கள், வாழைகள், தாழைகள் என்பன விளையப் பெற்று செழிப்புற்று விளங்கும் நாடு. இதனை பின்வரும் பாடல் தெளிவுறுத்துகின்றன.

**"சூழ மேதி இறங்கும் துறையில்**
**சொரியும் பாலை பருகிய வாளை…**

- மாதந்தவறாத மூன்று மழை, போகம் தவறாத விளைச்சல், மூன்று வேதங்களை அடிப்படையாக கொண்ட குறும் பலாக்கள், **நித்தியம், நைமித்தியம், காமிகம்** என மூன்று சிறப்புக்கள் தவறாமல் நடக்கின்ற நாடு. பிறப்பு, இறப்பு, வாழ்வு எனும் மூன்று நிலைகளிலும்நன்மை உண்டாதல் என பலவகை சிறப்புக்களை கொண்டிருக்கும் நாடாகும். இதனை பின்வரும் பாடலடிகள் தெளிவுறுத்துகின்றன.

**"மாதம் மூன்று மழையுள்ள நாடு**
**வருடம் மூன்று விளைவுள்ள நாடு**
**வேதம் மூன்றும் பலாவுள்ள நாடு**

- மேலும், மூன்று உலகங்களில் வாழ்பவர்களும் வருகைதந்து வழிபாடு செய்கின்ற நாடாக விளங்குவது.
- நாத மூன்று உருவாக அரன், அயன், அரி எனும் திரிமூர்த்திகளின் ஓர் உருவாகிய சிவபெருமான் குற்றாலநாதர் எனும் பெயரில் வீற்றிருக்கும் நாடு.
- வந்து சேர்பவர்களின் பாவங்கள் அனைத்தும் நீங்கப்பெறும் நாடாக விளங்குவது.
- மேலும் கரும்பும், செந்நெல்லும் நெருக்கமுறக் காணப்படுதல், மாம்பழக்கொத்துக்கள் தூங்கக் காணப்படல், வீடுகளில் தயிர் கடையும் மத்துக்கள் சுழலும் சிறப்பு,கொல்லைப் புறங்களில் முல்லை அரும்புகள் வெடித்தல், எப்போதும் மங்கல பேரிகை ஒலிகள் வெளிப்படுகின்ற நாடகவும் விளங்குகின்றது.
- அழகிய பெண்கள் (மென்மையான பருத்த மார்பகங்களை கொண்டவர்கள்) வாழுகின்ற சிறப்பு மிகுந்த நாடாகவும் விளங்குவது.

**03 திருக்குற்றால நாதர் பெருமைகள் வெளிப்படும் தன்மையினை தெளிவுறுத்துக? ( O/L 2016 03. ஆ )**

- வளைந்த இளம்பிறைச்சந்திரனை தனது சடாமுடியில் அணிந்திருக்கின்ற அழகிய திருமேனி கொண்டவர். "**கூனல் இளம்பிறை முடித்த வேணியலங்காரர்'**
- அருட்கொடை வழங்கும் கொடைத்தன்மையுடைய இறைவனாக குறும்பலாமரத்தினடியில் கோவில் கொண்டிருப்பவர். "**வழங்கு கொடை மகராசர் குறும்பலவின் ஈசர்**"
- அழகிய திருக்குற்றால மலையில் வீற்றிருப்பவர்
- அயன், அரி, அயன் ஆகிய மும்மூர்த்திகளின் உருவாக குற்றாலநாதர் எனும் நாமம் கொண்டு வீற்றிருப்பவர். "**நாதம் மூன்று உருவான குற்றால**"
- பலவகையான சிறப்புக்களை தன்னகத்தே கொண்ட குற்றால நாட்டில் உறைந்திருப்பவர்.
- மூன்று உலகத்தவர்களும் வந்து வழிபடும் குற்றால மலை இறைவன்

**"புவனம் மூன்றும் வலஞ் செய்யும் நாடு"**

- தென் ஆரியநாட்டினை சிறப்பித்து கொண்டிருப்பவர் **"சந்திர சூடர் தென் ஆரிய நாடே"**



S.Rajkumar

**04. ஆசிரியரின் கவிச்சிறப்புக்கள் / மொழிநடைச் சிறப்புக்கள் யாவை?**

- ஓசை நயமிக்கதாயிருத்தல் (சந்தச்சுவை)
- எளிமையான இலகுவான சொற்களை பயன்படுத்தியிருத்தல்
- இசையுடன் பாடத்தக்க வகையில் பாடல்கள் அமைந்திருத்தல்
- உயர்வு நவிற்சியணியை அதிகமாக பாடல்களில் பயன்படுத்தியிருத்தல்
    - கீழே சிந்துகின்ற கனிகளுக்கு வானத்தில் உள்ள தேவர்கள் கெஞ்சிக் கொண்டிருப்பர்.
    - தேன் கலந்த மலையருவிகளின் அலைகளானது வானின் வரை சென்று ஒழுகும். அதில் சூரியனின் தேர்ச்சக்கரமும், தேரில் உள்ள குதிரைகளின் கால்களும் வழுக்கிச் செல்லும்.
- குற்றால மலையின் இயற்கை வளத்துடன் இணைத்து பக்திச் சுவையுடன் பாடியிருத்தல்
- இறைவனுடைய பெருமைகள் பாடல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை.
    - **“கூனல் இளம்பிறை முடித்த வேணியலங்காரர்’**
    - **“வழங்கு கொடை மகராசர் குறும்பலவின் ஈசர்”**
    - **“சந்திர சூடர் தென் ஆரிய நாடே”**
- குற்றால நாதரின் மலை வளம், நாட்டு வளம் என்பவற்றை வெளிப்படுத்தியிருத்தல்

**05. இப் பாடப்பகுதியில் புலப்படும் வாழ்வியல் பண்பாட்டு அம்சங்கள் பற்றி எடுத்துரைக்க?**

பொதுவாகவே வாழ்வியல் பண்பாட்டு அம்சங்கள் எனும் போது ஒரு சமூகத்தின் வாழ்விடம், உணவு, ஆடை, விளையாட்டு, வழிபாடு, தொழில் முதலிய பல அம்சங்களை குறிப்பிடலாம்.

- குற்றால மலையில் வாழுகின்ற குறவர்கள், காட்டில் வாழும் வேடர்கள் என அவர்களது வாழ்விடம் காட்டப்படுதல்
- கிழங்கு, தினை, பழங்கள் என அவர்களது உணவு முறை குறிப்பிடப்பட்டிருத்தல்
- பெண்கள் சிற்றில் அதாவது மணல் வீடு கட்டி விளையாடுதல் எனும் வகையில் விளையாட்டு முறை காட்டப்படுகின்றது
- குற்றாலநாதரை வழிபாடியற்றுதல் என்பதன் ஊடாக மக்களது வழிபாட்டு முறை சுட்டப்படுகின்றது.
- நெல் விளைவித்தல், தயிர் கடைதல், வேட்டையாடுதல், என அவர்களது தொழில் முறைகள் பேசப்படுகின்றன.
- நடனம் புரிதல் என்பதன் ஊடாக கலை உணர்வு வெளிப்படுத்தப்படுகின்றது.
- வேடுவர்கள் கண்ணால் பார்த்து தேவர்களை அழைக்கும் போது உயர்வு தாழ்வு அற்று தேவர்களும் வந்து உறைவதற்கு விரும்பும் மலை இதில் ஒழுக்கம் காணப்படுகின்றது.
- வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு உணவு கொடுத்து உபசரிப்பதைப் போல தாழையானது பூக்களை சோறு போல சொரிய, வாழை தன் குருத்தினை விரித்து அவற்றினை ஏந்தும். என்பதன்மூலம் அங்குள்ள மக்களின் உபசரிப்பு தன்மையை நயத்துடன் காட்டியுள்ளார்

**06. இப்பாடல்களினூடு வெளிப்படும் அணிச்சிறப்பினை எடுத்துக்காட்டுக.**
**அதிகமாக உயர்வுநவிற்சியணி கையாளப்பட்டுளளது**

- குற்றால மலையில் இனிமை நிறைந்த பழங்கள் அதிகமாக உள்ளதை காட்டுவதற்காக
    - ஆண்குரங்குகள் பலவகையான கனிகளை பறித்துக் கொடுத்து பெண்குரங்குகளுடன் கொஞ்சும். அந்தப் பெண்குரங்குகள் உண்ணும் போது கீழே சிந்துகின்ற கனிகளுக்கு வானத்தில் உள்ள தேவர்கள் கெஞ்சிக் கொண்டிருப்பர்.
    - இளமையான குரங்குகள் மாமரத்தில் இனிய கனிகளைப் பறித்து அவற்றை பந்துகளாக அடித்து விளையாடும்
- மலையின் சிறப்பை காட்டுவதற்காக
    - வேடர்கள் தம் கண் பார்வையினால் வானில் உள்ள தேவர்களை கீழே வருமாறு அழைப்பர்.

S.Rajkumar

  - வானில் உலாவித் திரியும் சித்தர்கள் கீழே இறங்கி வந்து காயசித்தி மூலிகைகளை வளர்ப்பர்.
- மலையின் நீர் வளத்தை காட்டுவதற்காக
  - தேன் கலந்த மலையருவிகளின் அலைகளானது வானின் வரை சென்று ஒழுகும். அதில் சூரியனின் தேர்ச்சக்கரமும், தேரில் உள்ள குதிரைகளின் கால்களும் வழுக்கிச் செல்லும் எனவும்.
  - நீர் அருவியானது கழுங்கு விளையாடுவது போல முத்துக்களை சொரிந்து கொண்டிருக்கும். அந் நீர் அருவியானது வேடர் இல்லங்களின் முற்றங்கள் தோறும் பரவிச் சென்று சிறு பெண்கள் கட்டிய சிறு வீடுகளை அடித்துச் செல்லும் எனவும்.
- பால்வளத்தை காட்டுவதற்காக
  - நீர்நிலைகளில் எருமைகள் சொரிகின்ற பாலை வாளை மீன்கள் அருந்தும் அளவு பால் வளம் கொண்ட சிறப்பையும் கொண்ட நாடாக விளங்குகின்றது.
- பெறுமதியான அரிய மலர்கள் அதிகம் உள்ளதை காட்டுவதற்காக
  - தேன் நிறைந்த செண்பக மலர்களின் வாசனையானது வானுலகம் வரை சென்று பரவும்
  - இங்கு வெடிக்க காண்பதெல்லாம் விட்டின் பின்புறத்திலுள்ள முல்லைஅரும்புகளாகும்.

**உவமையணிகள்**

- நீர் அருவியானது கழுங்கு விளையாடுவது போல முத்துக்களை சொரிந்து கொண்டிருக்கும்.

  **உவமானம்** - கழங்கு விளையாட்டு

  **உவமேயம்** - நீர் முத்துக்களை உருட்டுதல்

  **பொதுத்தன்மை** – ஒருங்கு சேர்த்தல்

  **உருபு** - என
- வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு உணவு கொடுத்து உபசரிப்பதைப் போல தாழையானது பூக்களை சோறு போல சொரிய, **( O/L 2016 02.II.ஆ )**

  **உவமானம்** - வருவிருந்தினரை உபசரித்தல்

  **உவமேயம்** - வாழையிலைகளில் தாழைகள் மகரந்தங்களை சொரிதல்

  **பொதுத்தன்மை** – உவந்தளித்தல்

  **உருபு** - போல

**07 நீர்வளம் எவ்வாறு எடுத்துக்காட்டப் பட்டுள்ளது.**

- தேன் கலந்த மலையருவிகளின் அலைகளானது வானின் வரை சென்று ஒழுகும். அதில் சூரியனின் தேர்ச்சக்கரமும், தேரில் உள்ள குதிரைகளின் கால்களும் வழுக்கிச் செல்லும் எனவும்.
- நீர் அருவியானது கழுங்கு விளையாடுவது போல முத்துக்களை சொரிந்து கொண்டிருக்கும். அந் நீர் அருவியானது வேடர் இல்லங்களின் முற்றங்கள் தோறும் பரவிச் சென்று சிறு பெண்கள் கட்டிய சிறு வீடுகளை அடித்துச் செல்லும் எனவும்.

S.Rajkumar

## கடந்தகால வினாக்கள்

**7. "மாதம் மூன்று மழை உள்ள நாடு**
**வருடம் மூன்று விளைவு உள்ள நாடு.. ( O/L 2018 01. II )**

அ. இங்கு குறிப்பிடப்படும் நாடு எது?
திருக்குற்றாலம் அல்லது தென் ஆரிய நாடு

ஆ. விளைவு என்பது எதனை குறிக்கின்றது.
நல் விளைச்சல்

**5 " கிம்புரியின் கொம்பொடித்து**
**வெம்பு திணை இடிப்போம்... " ( O/L 2017 01. V)**

அ. இதில் கிம்புரியின் கொம்பு எனக்கருதப்படுவது யாது?
யானையின் பூண் பூட்டிய தந்தத்தை

ஆஇச்செயலை செய்பவர்கள் யார்?
குறத்தி பெண்கள்

**1.. " வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு கொஞ்சும்**
**மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்..." ( O/L 2019 01.II)**

ஆ. வானரம்,எனபதன் பொருள்? மந்தி என்பது என்ன?
வானரம் - ஆண் குரங்கு மந்தி- பெண்குரங்கு

**3 சூழ மேதி இறங்கும் துறையில் ( O/L 2016 02.II )**
**சொரியும் பாலை பருகிய வாளை**

அ. நாட்டுவளம் விபரிக்கப்படும் விதம்
எருமைகள் கூட்டம் கூட்டமாக நீராடுகின்ற நீர்த்துறைகள் நிறைந்த நாடு. அத்துடன் நீர்நிலைகளில் எருமைகள் சொரிகின்ற பாலை வாளை மீன்கள் அருந்தும் அளவு பால் வளம் கொண்ட சிறப்பையும் கொண்ட நாடாக விளங்குகின்றது. **( O/L 2016 02.II.அ )**

ஆ. அணியின் பொருத்தப்பாடு
வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு உணவு கொடுத்து உபசரிப்பதைப் போல தாழையானது பூக்களை சோறு போல சொரிய, **( O/L 2016 02.II.ஆ )**

உவமானம் - வருவிருந்தினரை உபசரித்தல்
உவமேயம் - வாழையிலைகளில் தாழைகள் மகரந்தங்களை சொரிதல்
பொதுத்தன்மை – உவந்தளித்தல்
உருபு – போல

**முழங்கு திரை புனல் அருவி கழங்கு என முத்தாடும் ( O/L 2019 02.III )**
**முற்றம் எங்கும் பரந்து பெண்கள் சிற்றிலை கொண்டு ஓடும்**

அ. இப்பாடலில் நீர்வளம் எவ்வாறு காட்டப்படுகின்றது.
நீர் அருவியானது கழுங்கு விளையாடுவது போல முத்துக்களை சொரிந்து கொண்டிருக்கும். அந் நீர் அருவியானது வேடர் இல்லங்களின் முற்றங்கள் தோறும் பரவிச் சென்று சிறு பெண்கள் கட்டிய சிறு வீடுகளை அடித்துச் செல்லும் எனவும்.

ஆ. தேனலர் செண்பக வாசம் வானுலகில் வெடிக்கும் என்பதன் மூலம் உணர்த்தப் படுவது யாது?
தேன் நிறைந்து வழிகின்ற செண்பக மலர்களின் வாசம் மிகுந்து வானுலகு வரை செல்வதாக உயர்வு நவிற்சி அணிமூலம் காட்டப்படுகின்றது.

**02. திருக்குற்றால நாட்டுவளம் பற்றி தெளிவுறுத்துக? ( O/L 2016 03. அ ) ( O/L 2020 03. ஆ )**

**01. திருக்குற்றால மலை வளம் பற்றி எடுத்துரைக்குக.? ( O/L 2020 03. அ)**

**03 திருக்குற்றால நாதர் பெருமைகள் வெளிப்படும் தன்மையினை தெளிவுறுத்துக?( O/L 2016 03. ஆ )**

S.Rajkumar